எம்.சி.ஓ.பி எண்: 634/2016,5352/2018(Joint Trial) தேதி: 11.08.2025

எ,மசா. : 3

பெயர் : பால் மணி

த/பெ. : ஜெபமணி

வயது : 60

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் எஸ்.1 மவுண்ட் போக்கவரத்து புலன் ஆய்வு பிரிவில் உதவி ஆய்வாளராக ஆக பணியாற்றி வருகிறேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதத்தை தாக்கல் செய்கிறேன், அது எ,மசாஆ 24 ஆகும். சாலை விபத்தில் இறந்து போன மணிகண்டன் வழக்கை புலன் ஆய்வு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த ஆய்வாளர் பெயர் தியாகராஜன். இறுதி அறிக்கையில் கையொப்பம் உள்ளது,. கிழே பெயர் குறிப்பிடவில்லை. அவர் தற்பொழுது வேறு காவல் நிலையத்தில் பணி புரிகிறார். புலன் ஆய்வு அதிகாரிக்கு நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வருமாறு எங்கள் ஆய்வாளர் தகவல் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. பிரேதத்தை விசாரணைக்கு பிறகு யாரிடம் கொடுக்கப்பட்டது என்றால் இறந்தவரின் அக்கா முத்துலெட்சுமியிடம் கொடுக்கப்பட்டது. இறந்து போன மணிகண்டனுக்கு திருமணம் ஆகவில்லை என இறப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேத விசாரணை அறிக்கையில் திருமணம் ஆனவர் என்ற குறிப்பு உள்ளது. 22.12.2015 ல் பிரேதவிசாரணை அறிக்கை மற்றும் இறப்பு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரி. கோப்புகளின் அடிப்படையில்தான் சாட்சி சொல்கிறேன். விபத்து மோட்டார் சைக்கிலுக்கும் டிப்பர் லாரிக்கும் இடையே ஏற்பட்டது என்றால் சரி. முதல் தகவல் அறிக்கை டிப்பர் லாரி ஓட்டுநர் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரி. புலன் விசாரணையை முடித்த பிறகு இறுதி அறிக்கை டிப்பர் லாரி ஓட்டுநர் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரி. குற்றவழக்கு தற்பொழுது நிலுவையில் உள்ளது. பிரேத விசாரணை அறிக்கை எங்கள் கோப்பில் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கைதான் பிரேத விசாரணை அறிக்கை என்றால் அது மசாஆ 15 ஆகும். இதில் 2,6 வது பத்தியில் அவர் திருமணம் ஆனாவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேத விசாரணை செய்த பிறகு இறப்பு அறிக்கை தயாரிக்கப்படும் என்றால் சரி. இறப்பு அறிக்கையில் திருமணம் ஆகவில்லை என்ற மாற்றம் உள்ளது, அது எதற்காக என்ற காரணம் குறிப்பிடவில்லை என்றால் சரி. பிரேதத்தை

முத்துலட்சுமி வாங்கிஉள்ளார் என்றால் சரி. அவரை தவிர வேறு பெயர்கள் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. அதனால் இறந்துபோனவர் திருமணம் ஆனவர் என்றால் அது பற்றி தெரியாது.

**2ம்எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

x

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.